# தீர்த்தக்கரை

காலாண்டிதழ் - மார்ச் - மே - 2015

வண்ணத்துப்பூச்சிகளின் இருக்கை



செல்லமுத்து குப்புச்சாமி ✦ ✦ ஜெயதேவன்

ஆறுமுகம் நாச்சிமுத்து ✦ ✦ கவிவாணண்


மேகதாசன் ✦ ✦ செ.ரெஜினா

எம்.சிவக்குமார் ✦ ✦ ஞா.பிரான்ஸிஸ்கேதரின்

பச்சோந்தி ✦ ✦ ஆரோக்யமேரி

# 'ல' கர, 'ள' கர, 'ழ' கர, 'ர' கர, 'ற' கர, 'ன' கர, 'ண' கர, 'ந' கர, வேறுபாடுகளில் வழக்காற்றுச் சொற்கள்

செ.ரெஜினா, தமிழ்துறை உதவிப் பேராசிரியை




தமிழிலுள்ள 216 உயிர்மெய் எழுத்துக்களுக்கும் பிறப்பிடங்கள் வேறுபட்டுள்ளன. உயிரெழுத்துக்களை யாரும் தவறுதலாக உச்சரிப்பதில்லை. ஆனால் மெய்யெழுத்துக்களுடன் சேரும்போதுதான் பலரும் தமிழைக் கொலை செய்து விடுகின்றனர்.

தமிழ் எழுத்துக்களுக்கு பிறப்புமுறை குறித்துத் தொல்காப்பியரும், நன்னூலாளரும் பல செய்திகளைக் கூறியுள்ளனர். மொழியியல் அறிஞர்களும் அவ்வொலிப்பு முறைகளுக்குப் பல்வேறு பெயரிட்டு அவற்றின் நுட்பமான வேறுபாடுகளைச் சுட்டியுள்ளனர். தமிழுக்குரிய சிறப்பெழுத்துக்களாக நன்னூலார் ழ, ற, ன, ஆகிய மூன்றைக் குறிப்பிடுவார். இவற்றைப் பலரும் சரியாக உச்சரிப்பதில்லை. அதற்குக் காரணம் ழ கரத்தை ஒட்டி ல கரமும், ள கரமுமாகிய இரண்டெழுத்துக்கள் இடையினத்தில் இருப்பதுதான்.



வல்லின ற கரம் போல் இடையினத்தில் ஒரு ர கர எழுத்தொலி இருப்பதைக் கூட்டலாம். மெல்லினத்திலேயே ன கரத்தோடு, ண கரமும், ந கரமும் இருக்கின்றது. இவற்றைச் சரியாக உச்சரிக்கத் தெரியாமல் இருப்பது ஒருபுறமிருக்க எந்தெந்த எழுத்துக்களைப் பயன்படுத்தும்போது எப்படியெல்லாம் மாறுகின்றது என்பதும் பலருக்கும் (பட்டம் பெற்றவர்களுக்கும்) தெரிவதில்லை.

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பதுபோல எழுத்துக்களை ஆரம்பத்திலிருந்தே சரியாக உச்சரிக்கக் கற்றுக் கொண்டால் எழுதும் போது பெரும்பாலும் தவறுகள் ஏற்படாது. தமிழில் ஓரெழுத்திற்குப் பதிலாக வேறொரு எழுத்தைக் கேட்டால் பொருள் மாற்றம் உண்டாகும் தன்மையில் பல சொற்கள் உள்ளன. எழுத்துக்கள் சிலவற்றில் உள்ள பொருள் வேறுபாட்டைக் காணலாம்.

கல் என்பதற்கும் கள் என்பதற்கும் வேறுபாடு உள்ளன. கள் குடித்தான் என்ற பொருளில் வரும் தொடரைக் கல் குடித்தான் என்று உச்சரித்தால் அல்லது எழுதினால் நகைப்புதான் வரும். கல்லைக் கடிக்க முயற்சிக்கலாமேயன்றி குடிக்க முடியுமா எனச் சிலர் புத்திசாலித்தனமாக ஒரு கேள்வியும் கேட்பார்கள்.

ல கர, ள கர, ழ கர வேறுபாடு : வலி – நோவு, வளி – காற்று, வழி – பாதை
ர கர, ற கர வேறுபாடு : அரி - திருமால், சிங்கம், அறுத்தல், அறி - அறிந்து கொள், திரை – அலை, திறை – மறைப்பு, நிரை – வரிசை, நிறை – மிகுதி.
ன கர, ண கர, ந கர வேறுபாடு : அன்னாள் - அவள், அந்நாள் - அந்த நாள், அன்னம் - ஒரு வகைப் பறவை, அண்ணம் - வாயின் மேற்பகுதி.
கனம் - கணம் போன்ற சொற்கள் வானொலியிலும் தொலைக்காட்சியிலும் உச்சரிப்பு மாற்றத்தோடு பேசி, பொருளைத் திரித்து நகைச்சுவையோடு வேதனை ஏற்படுத்துவதைப் பார்க்கிறோம்.

சிலர் அவர் பொறுப்பு என்று எழுத வேண்டிய இடத்தில் அவர் பொருப்பு என்று தவறுதலாக எழுதுகிறார்கள். அவ்வாறே என்னைப் பொறுத்தவரை என்று எழுதவேண்டிய இடத்தில் என்னைப் பொருத்தவரை என்று தவறுதலாக எழுதுகிறார்கள். இதற்குக் காரணமும் ஆரம்பத்திலிருந்து சரியாக உச்சரிக்கப் பழகாமைதான்.பெருமைக்கும் பொறுமைக்கும் வேறுபாடு தெரிவதில்லை. திருப்புமுனைக்கும் திறப்பு விழாவிற்கும் வேறுபாடு உள்ளது. சிரிய என்பதற்கும் சிறிய என்பதற்கும் எந்த ர கரம் பயன்படுத்த வேண்டும் என்பதில் சில மாணவர்களுக்கு சொல்லப் போனால் சில ஆசிரியர்களுக்கும் தகராறு உள்ளது. தீக்கிரையாகும், எரிந்தான் என்ற சொல்லை எறிந்தான் என்று எழுதினால் தமிழையே தூக்கி எறிந்த மாதிரி ஆகிவிடாதா? இவை போன்றவைகளை சற்று யோசிக்காமலேயே இந்தத் தவறுகள் ஏற்படுகின்றன. அதை குறைத்து தமிழ் செழுமையடைய எல்லோரும் சேர்ந்து இயங்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. சேர்ந்து பயணிப்போம்.